# சுதேச கீதங்கள்.

நாடக அரசி **K. B.** சுந்தராம்பாள், பாடிய

பண்டித மோதிலால் பாட்டு

செந்தூர் வேலாண்டிப் பாட்டு

மதுரகவி. சோ. சிவகாமிநாதன் பாடிய

## பரிதாப கீதத்திரட்டு.

பண்டித ஜவர்லால் கீதம்

முதலியன.



சரஸ்வதி புத்தகசாலை,
63, ஜிந்தும்பிட்டித் தெரு,
கொழும்பு.

காபிரைட்] **1932** [விலை அணா 3.

Digitized by Roja Muthiah Research Library

உ

கடவுள் துணை.

# சுதேச கீதங்கள்.

## நாடகராணி மிஸ் K. B. சுந்தராம்பாள் பாடிய

## பண்டித மோதிலால் பாட்டு.

தாரணியில் அன்புகொண்ட—என்ற மெட்டு

இராகம்—இந்துஸ்தான் தோடி, தாளம்—ஏகம்

பல்லவி.

பண்டிதமோதிலால் நேரை பறிகொடுத்தோமே

அநுபல்லவி.

பறிகொடுத்தோமே—மனம்—பரதவித்தோமே (பறி)

சரணம்.

எண்டிசை எல்லாம் புகழ்ந்த
ஏழைகளுக் கன்பு தந்த
பண்டிதரே உமது தேகம் பரகதியாச்சே
பரகதியாச்சே—எங்கள்—பலமெல்லாம் போச்சே (பறி)

தோகையறு.

ஆயிரத்து எண்ணூற்றி அறுபத்தி ஓராண்டு
மே மாதத்தில் அவதரித்தே
தூயகுண க்ஷத்திரிய துரைராஜ சிங்கமென்று
துணையாய் நின்று
தாய்க்த்தில் அன்புருகும் தவயோகி
காந்திமகான் தாமதிக்க
மாயமுடன் மறைந்தனையே மகன் ஜவஹர்லால் நேரு
மனம் கொதிக்க (பறி)

Digitized by Roja Muthiah Research Library

பாட்டு

தேவர்களும் உமை அழைத்து
சிங்கா தனத்தில் வைத்து

பூவுலக வாழ்வை வென்ற புண்ணிய மூர்த்தி
புண்ணிய மூர்த்தி— எங்கும் புகழுதே கீர்த்தி (பறி)
பிப்ரவரி தேதியாறில் பிரமுடித்த உனது திரேகம்
எப்படி லக்ஷ்மணபுரியில் இறந்த மாயமே
இறந்தமாயமே—தர்மம்—தீர்த்தநியாயமே (பறி)
தேவருக்குத் துணையிருக்க தேசமதை யாதரிக்க
ஆவலுடன் வரவழைத்த அவசரந்தானே
அவசரம்தானே தெய்வ அம்சம் நீர்தானே (பறி)

ஷ்டி தோகையரு

சீக்கிரமா யுத்தமதில் ஜீவனையே கொடுத்துதவி
செய்த செல்வா
பாக்கியநற் பஞ்சாப்பில் பரிதவிக்கும் ஏழைகட்குப்
பசிநோய் நீங்க
கேட்பதையன் புடனீந்த கண்ணியனே கர்னகுல
கிருபாமூர்த்தி
வாக்குறையும் பண்டிதனே வன்மையது ஏடடங்கா
வசனந்தானே

ஷ்டி சரணத்தோடர்

மனைவிமக்கள் சுற்றமெல்லாம் மாறுது சிறையிருந்து
அனைவருக்குந் திடங்கொடுத்த ஆஸ்திகத்யாகா
ஆஸ்திகத்யாகா ஜவர்லால் கீர்த்திவைபோகா (பறி)

ஷ்டி தோகையரு

கோடிலக்ஷம் ஜனங்களுக்கு கொடுத்துதவி செய்தருளுங்
கோமான் நினைத்
தேடிவரும் இந்தியரைத் திகைத்துமனம் வாடிடவும்
தீராக்கண்ணீர்
நீடியவுன் அரண்மனையாம் ஆனந்தபவனமது
நிலைத்தே யோங்கி
கூடிவருஞ் சுயராஜ்ய பவனமெனக் கூப்பிடுதே
கொடிகளேந்தி

ஷ்டி சரணத்தோடர்

தேசத்தொண்டுக்காய் பிறந்து செவ்வெல்லாந்தான மீந்து
பாசமிகும் பாரதத்தாய் பரமதுர்ப்பாக்யம்
பரமதுர்பாக்கியம் சட்டம் படித்தோமே வாக்கியம் (பறி)

Digitized by Roja Muthiah Research Library

## செந்தூர் வேலாண்டிப் பாட்டு.

பல்லவி

செந்தூர் வேலாண்டி ஆண்டி திரு (செ)

அநுபல்லவி

அவன் சேவை க்ஷேமந்தானுண்டி ஆண்டி திரு (செ)

சரணம்

பந்தபாசங் கடந்தால் பாவலர் உண்டுவந்தால்
பரமகுருபரன் அறுமுகசரவணன்
திருமலை முருகனும் முறையொடு வறுமையும்

சரணத்தொடர்

பரிமணத்துயர் அரிய சொக்கர் மகிழ்
பிரிய முற்றதொரு வருகுமற் புதமே
படைத்த பிரமனை அடைத்து சிறையினில்
உரைத்த பிரணவ முகத்தனக மகிழ் திரு (செ)

சரணம் பல்லவி கண்ணி

கந்தன் கடம்பன் குகன் கன்னி வள்ளி லோலன்
கற்பனை தற்பர சாமி சொல்லற்புத
பொற்புய முற்றிடில் சாமி தமிழ்ப் பதில்

---

## பாரத வீரத் தியாகிகளாகிய லாகூர் பகவத்சிங் ராஜ குரு சுகதேவர் இம்மூவர்களையுந் தூக்கிலிட்ட

# பரிதாப கீதத் திரட்டு.

முருகர் துதி.

### ஆனை முகன் தம்பி ஆறுமுகன் காப்பு.

பாரதத்தின் விடுதலையைப் பண்புடனே பெற்றிடவே
கோரத்தனமாய் உயிரை கொடுத்தனர்காண்—வீரரிவர்
பாரினிலே பட்டகதை பரிதாபமய்யய்யோ
சோர்வின்றிசொல்லச் சுகமே

### 1 (தாணியில் அன்பு கொண்ட என்ற மெட்டு)

பல்லவி.

நெஞ்சிரக்கமற் பெரும் நீசர்களாக்ஷி
நீகர்களாக்ஷி
பாதகர்சூட்சி

Digitized by Roja Muthiah Research Library

(அனு பல்லவி)

2 கொஞ்சமல்ல அக்கொடுமை
கூறவெனில் மிகக்கடுமை
வஞ்சமனம் கொண்டே பகவத்சிங்கை தூக்கினர்
சிங்கை தூக்கினர் பகவத்
சிங்கை தூக்கினர் (நெ)

3 ரஜகுரு சுகதேவர் நேசரொடு மூவரையும்
மோசக்கருத்துக் கொண்டே மூடர்கள் கொன்றார்,
மூடர்கள் கொன்றார்- குடி
கேடர்கள் கொன்றார் (நெ)

4 இரண்டு லெக்ஷம் மாஜனங்கள்.
திரண்டு ஒன்றாகக்கூடி
தெண்டனிட்டு கையொப்பமும் தெரிந்தனுப்பினரே
தெரிந்தனுப்பினரே நீதி
வரைந்தனுப்பினரே (நெ)

5 பாரதத்தாய் மகிழ் நம்
சோதரர் மூவரையும்
கோரத்தனமாய் கொன்றார் சோதனைகாலம்
சோதனைகாலம்- மனோ
வேதனை காலம் (நெ)

6 சுயராஜ்யமும் இன்றேல்
சுகவாழ்வும் இல்லையென்று
பயமின்றி போராடிய பக்தனை இழந்தோம்
பக்தனை இழந்தோம்- பெரும்
துக்கத்திலாழ்ந்தோம் (நெ)

7 உத்தியோக வேட்கையினால்
உண்மைச் சகோதரரை
சத்திய நிலை தவற சதிக்குள் ஆக்கினரே
சதிக்குள் ஆக்கினரே உயர்
பதியைநோக்கினரே (நெ)

8 அந்தோ அந்திப்பொழுதில்-அவசர சட்டப்படி
சிந்தை கலங்க மூவர் சிரசையும் கொய்தார்
சிரசையும் கொய்தார்- சித்ர
வதையுமே செய்தார் (நெ)

9 மதுர கவி நாதனோடு
மானிலம் புகழ் குளத்து
நீதியுரை கேட்டு மனத்துயர் தவிர்ப்போமே
துயர் தவிர்ப்போமே- சாந்தி
கதர் தரிப்போமே (நெ)

2 (ராம பஜன ஹோதியா என்ற மெட்டு)

(பாட்டு.)

பாரத வீரத்தங்கமே-பகவத் சிங்கமே
ஆரவார மிகுந்த ஆங்கிலப் பேய்களாலே
ஆருயிர் அறந்தனையோ—பகவத்சிங்கமே (பா)

தொகையறு.

இருபதாம் நூற்றாண்டில் இந்தவித அனியாயம் எத்தேசத்திலு முண்டா
பருவதம் போலெங்கள் பண்புள்ள ராஜகுரு சுகதேவரும் மாண்டார்

பாட்டு.

வெடிக்குண்டு குற்றத்தாலே
வீணர் தம் கைகளாலே
நொடிக்கு ளுயிர் நீத்தனையோ பகவத்சிங்கமே (பா)

தொகையறு.

கர்வமே மிகுந்த இர்வின் கவர்ன்மெண்டாரால் கலங்கவும காலமாச்சே
ஆர்வமே கொண்ட எங்கள் அன்னை பாரதத்தேவி அங்கமும் நோகலாச்சே

பாட்டு.

நாதனும் சிவகாமி, நவின்றிடவே இப்பூமி
நீதியுரை புகழ் நேமி—பகவத்சிங்கமே (பா)

3 (மரகாபாசல் என்ற இந்துஸ்தான் மெட்டு)

1 ஐயோ கொடிய காலவிதியே
யாரிடம் சொல்லுவேன் இத்ததியே
2 குய்யோ முறையென குவலயம் நடுங்க
கூறுவேன் யான் அக்கதியே (ஐயோ)
3 பாரத வீரனும் பகவத் சிங்கனை
பாவிகள் கொன்றது பரிதாபமே (ஐயோ)
4 ராஜகுருவாம் நண்பன் சுகதேவர்
நேசமொடு உயிர் நீத்தனரே (ஐயோ)
5 ஞானக்கண்ணில்லா பூனைகக்கண் வெள்ளையர்
நம்—நாட்டினில் செய் கொடுமை விபரீதமே (ஐயோ)
6 நாதனும் சிவகாமி நவின்றிட இப்பூமி
நம்பிக்கொண்டாடில் வரும் ஜெயமே (ஐயோ)

Digitized by Roja Muthiah Research Library

4 (கண்ணிய மிகுந்த பெரும் சாது என்ற மெட்டு)

1 பாதகராம் வெள்ளையராலே நம்
பாரதத்திலே கொடுமை மேலே பெரும்
நீதியற்ற செய்கையதை கேளே அதை
நினைக்க நினைக்க மனம்
கலக்க முறு மென்னண்ணு (பா)

2 நீதியோ பகவத்சிங் கைத்தூக்கில்—இட்டது
நேயரே நாம் ஆராய்ந்து பார்க்கில்-இது
நீதியற்ற செய்கை யென்ற போக்கில்-நாம்
நேயரனைவரும் ஏக நேயமொடு நின்றுழைப்போம் (பா)

3 தாய்நாட்டில் அன்பு மிகக்கொண்டு—தன்னை
தானறியா குற்றம் செய்வதுண்டு—அதை
சேய்போல் பிழைபொறுப்பர் பண்டு இந்த
காட்டு மிராண்டிகளின்
கூட்டுறவா சூழ்லேது (பா)

4 நாதன் சிவகாமி தமிழ் பாடி-வெகு
நன்னயமுடன் மலர்கள் சூடி-நல்
நீதியாகும் காந்தி வழி தேடி-நாம்
சாத்மீகத்துடனுழைப்போம்
ஆத்மீக பலம் பெறலாம் (பா)

5 (கிளிகண்ணி வர்ண மெட்டு)

1 சுதந்தர தாகம் கொண்டோர்
சுத்த வீரராக வந்தோர்
இதமிலாச செய்கையாலே-பாப்பா
இவ்வுலக வாழ்வை நீத்தார்

2 மன்னன் பகவத்சிங்கம்
மானிமைம் புகழும் தங்கம்
சொன்னயமிகுந்தவனே-பாப்பா
சுத்த வீரனுகுமடி

Digitized by Roja Muthiah Research Library

3 ராஜகுரு சுகதேவா
நேசரொடு இவர் மூவர்
காசினியோர்கள் கலங்க-பாப்பா
கட்டுப்பட்டார் காலன் கையில்

4 சதிவழக்குகளாலே
சதிகாரர் கைகளாலே
பதியினில் உயிர் விட்டனர்—பாப்பா
பக்தர்களை தூக்கிவிட்டனர் (சு)

5 மதுர மிகு நாதன் கீதம்
மண்டல மெங்குமே நிதம்
மதுர மிகு கவியாகுமே-பாப்பா
மகிழ்வுற நீதியாகுமே (சு)

---

(காந்திப்பாட்டு)

## (கதளுது தூகலராகப்பிரேய என்ற மெட்டு)

பல்லவி

கதராடையால்—கடைத்தேறலாம்
காந்திமகான் கண்டிதம் செய் நாட்டு (க)

அநுபல்லவி

பதராடையே—பெரும் பீடையே
பண்புடனே நம்பும் துன்பமேயகலும் (க)

சரணம்

கூட்டை சுற்றுவோமே
நாட்டைப் பற்றுவோமே
கேட்டை நீக்குவோமே
வாட்டமற்று நாமே
நாட்டமாகவே நாதன் சிவகாமி
நவிலும் மொழிபோல் நம்பிடும் நம் நாட்டு (க)

Digitized by Roja Muthiah Research Library

(சிட்டா சுரப்படி பாடவும்)

பூரணமாகிய விமரிசையோடு நல்
காரணம் யாவையும் காணுவோமே
பரிவுடனிது தநியணிகுவோம்
நமதுளம் கனிவொடு சமரசமடையவே மகிழ்வுறு (க)

## 7 (ஓ பாலஷண்முகா என்ற மெட்டு)

பல்லவி

ஸ்ரீ பாரதத் தேவி நின் பாதாரமே
பரிவுடனி துததிபணிந்தேன் நன்

அநுபல்லவி

சாரதாவா மென் தாயே
சமரசமொடு விமரிசை பெற பா
சாரதாவா மென் தாயே
சாத்வீகத்தால் ஜெயம்பெற பா
சாரதாவா மென் தாயே
சத்திய நித்திய குணமிகு பா

சரணம்

மாமகான்மதியூகி பரோபகாரனை எம்
மாரசில்காந்தியும்
பாமணங்கமழ் சிவகாமிநாதன்சொல்
க்ஷேமங் கொண்டிட பூமி எங்குமே ஸ்ரீ பா

(பாலாபிஷேகப் பழனிமலையப்பன் என்ற மெட்டு.)

பல்லவி

பாரோர் புகழும் பகவத்சிங்கம் போல்
இப்பாரனில் வீரா பிறப்பதெப்போ

Digitized by Roja Muthiah Research Library

சீரோங்கும் பாஞ்சால மீதினிலேவந்த
 தேசியத் தீரனைக்காண்பதெப்போ

தொகையரு

அரிகிருஷ்ண சிம்மன் செய் அருந்
 தவத்திலே யுதித்த ஆசைமிகு நேய தீரா
உரிமையிலா தேயத்தில் உறைவது
 சரியில்லை என்றோதிய உண்மை வீரா

பாட்டு முடுகு

மதுர மிகுகவி நாதனின் கீதம்
 மண்டல மெங்குமே கொண்டிடில் நீதம்
நீதகுணப்பெருகுளத்து சொல் வாக்கியம்
 நேயரே கேட்டிடுவீர் பாக்கியம்
 பரிதாபக்கீதத்திரட்டு முற்றும்

---

## பண்டித ஜவஹர்லால் நேரு கீதம்.

(கந்தா காருண்யனே, என்ற மெட்டு.)

பல்லவி

செல்வன் சிறைபுகுந்தான்
 சிந்தை மிகவே நொந்தான்—பிறவி (செ)

கெஜல்

கல்மனம் படைத்த வெள்ளைக் கயவர்செய்த மோசமே
அல்லும் பகலும் அவசரமாம் அடக்கு முறை நாசமே—பி (செ)

தொகையரு

அலகபாத் நகரை விட்டப் புறம்போக லாகா தெனவே
 அறிக்கை செய்தார்
பலகலையும் தெரிந்துணர்ந்த பண்டிதனும் ஜவஹர்லாலைப்
 பரிவுடனே
பாரபக்ஷமற்ற பெரும் பாதகர் சிறைப்பிடித்தார் இதுபரி
 தாபமே

Digitized by Roja Muthiah Research Library

பாட்டு

அந்தோ அடக்கு முறை—அவனீதக் குறை (அந்தோ)

கெஜல்

விந்தையாகும் வில்லிங்டனின், வீர தீர அரசாக்ஷியே
இந்தியாவில் நிலையா தென்று, சிந்தை சொல்லும் சாக்ஷியே

பாட்டு

மைந்தன் குளத்து சொன்ன—மதுரக் கவியின்பமே (மை)

கெஜல்

நீதியற்ற ஆக்ஷியிங்கு நிலைக்குமோ சொல் நீதியே
நாதனும் சிவகாமியின் சொல் நவின்றிடப் பெருங் கியாதியே

பாட்டு

செல்வன் சிறை புகுந்தான்—சிந்தைமிக வேர்தாந்தான்

---

## ஸ்ரீமாந், S. S. விஸ்வநாத தாஸ் பாடியது.

(எந்தனது திருநாடு என்றமெட்டு)

கண்ணிகள்.

கொக்கு பறக்குதடி பாப்பா
கோபமின்றி கூப்பிடுமாம் பாப்பா

கொக்கு என்றால் கொக்கு
நம்மைக் கொல்லவந்த கொக்கு—மக்களே

ஏமாற்றி வாழவந்த கொக்கு
மாமிச வெறிபிடித்த கொக்கு பாப்பா

நீண்ட அலகுடைய கொக்கு—குளிர்
காற்றுமழை கடல்வாடை தாளவந்தகொக்கு
வந்தகொக்கு பாப்பா வெள்ளை கொக்கு
பாப்பா வேடிக்கை பார்க்கவந்த கொக்கு
பாப்பா அது வியாபாரம் செய்யவந்த
கொக்கு அதற்குமேல்

Digitized by Roja Muthiah Research Library

நம்மை ராஜாங்கம் ஆள வந்த கொக்கு
லண்டனிலே வேந்தனென்னும் கொக்கு — அது
சுற்றி பறக்குதடி பாப்பா — அது
சுழன்றுசுழன்று பறக்குதடி பாப்பா — அது
முழிக்குதேடி பாப்பா
அலையுதடி பாப்பா பாப்பா — கொக்கு
நம் ஆரியருக்கு ஞானக்கண்ணு பாப்பா
நாடுமுற்று சுற்றலையும் வெள்ளை கொக்கு

கண்ணுபாப்பா

பூனைகண்ணு வைத்திருக்கும் கொக்கு
புவனமெல்லாம் முழுங்கவந்த கொக்கு
பாவி என்று பெயரெடுத்த கொக்கு
பாணம்வெடி வைத்திருக்கும் கொக்கு
பாரதமக்களை பரதவிக்க விட்ட கொக்கு
வெள்ளை குறங்கு என்னுங் கொக்கு
இந்தியாவில் வேலைபார்க்க வந்த கொக்கு
செத்தமாட்டை தின்றலையும் கொக்கு
ஜெகமெலாம் சுத்திவருங் கொக்கு

கோட்டையை சுத்தியே பாப்பா
கொடிகட்டி அழுகுதடி பாப்பா

சங்கீத நேயர்களே இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்!

குறைந்த விலை! நிறைந்த பாட்டுகள்!!

சொற்ப பிரதிகளே இருப்பதால் பின் இல்லையே என்று ஏமாறாமல் முந்தியே வாங்கிக் கொள்ளுங்கள்.

———:O:———

# புதிய கிராமபோன் சங்கீதக் களஞ்சியம்

## பத்து பாகங்கள் படங்களுடன்

விலை அணா **12** தான்.

இதில் திருச்செந்தூர் ஷண்முகவடிவு, கோயம்புத்தூர்தாயி S.V. சுப்பையா பாகவதர், A.S. ராசப்பா, மிஸ். A. சுந்தரம், S.R. கமலம், T.M. காதர்பாஷா, S.G கிட்டப்பா, R. நடராஜாச்சாரி, K.B. சுந்தராம்பாள், ஸ்ரீ ரங்கம் புல்லுட் ருக்மணி, மிஸ். வனஜாக்ஷி, பழனி அஞ்சுகம், T.S. கிட்டுப்பிள்ளை, T.K. இராமசாமிப்பத்தர், பபூன் ஷண்முகம், கபிலவாய் இராமநாதசாஸ்திரிகள், M.S. ராமசந்திர ஐயர், மதுராந்தகம், V.D. சுவாமி பாகவதர், சிறுகளத்தூர். மிஸ். சாமா, S.D சேஷாத்திரி ஐயங்கார், விசாலூர் N. சுப்பிரமணிய பாகவதர், மிஸ். சுப்புலக்ஷ்மி, M. M. மாணிக்க பாகவதர் முதலியவர்களும் இன்னும் அனேக சங்கீத விற்பன்னர்களும் கிராமபோனில் பாடிய பாட்டுகளும் இன்னும் பலவிதமான பாடல்களும் அடங்கியுள்ளன.

**சரஸ்வதி புத்தகசாலை.**

**63, ஜிந்துப்பிட்டித் தெரு,**

கொழும்பு.

கொழும்பு அச்சு இயந்திரசாலை, 71-21, சட்டார[illegible] [illegible]ம்பு.